**சுருக்கம்**

பணியமைப்பு – நகராட்சி நிர்வாகம் – நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப பணியிடங்களுக்கான வரையறை நிர்ணயம் செய்து அதற்கேற்ப புதிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் ஏற்கெனவே உள்ள பணியிடங்களை முறைப்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை**

**அரசாணை (நிலை) எண்.10** **நாள் 23.01.2023**

**திருவள்ளுவராண்டு 2054**
**சுபகிருது, தை – 9**

**படிக்கப்பட்டன :**

1. அரசாணை (நிலை) எண்.616, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை, நாள் 30.03.1973.
2. அரசாணை (நிலை) எண்.721, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 17.06.1986.
3. அரசாணை (நிலை) எண்.86, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 18.10.2021.
4. அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 01.11.2021.
5. அரசாணை (நிலை) எண்கள் 116, 117 மற்றும் 118, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 07.12.2021.

**மீண்டும் படிக்க:**

6. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.10936/எம்.எ.1/2022–2, நாள் 25.04.2022.
7. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க. எண்.10936/எம்.எ.1/2022, நாள் 12.07.2022 மற்றும் 23.11.2022.

*******

**ஆணை:**

நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட முன்மொழிவில், புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட 28 நகராட்சிகள் உள்ளிட்ட 70 இரண்டாம் நிலை நகராட்சிகள், 31 முதல் நிலை நகராட்சிகள், 25 தேர்வு நிலை நகராட்சிகள் மற்றும் 12 சிறப்பு நிலை நகராட்சிகளில், அவற்றின் நிலைகளுக்கேற்ப பணியிடங்களை தோற்றுவித்து அவற்றை முறைப்படுத்தி வரையறை (Norms) நிர்ணயம் செய்வதற்கு ஏதுவாக கீழ்க்கண்டுள்ள விவரங்களை அரசுக்கு அனுப்பியுள்ளார்:–

(i) மேலே முதலாவதாக மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளின்படி 7 நிர்வாக மண்டலங்கள் தோற்றுவிக்கப்பட்டன. 01.01.2021–ல் 121 நகராட்சிகள், 7 நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகங்களின் நிர்வாக கட்டுப்பாட்டில் இயங்கி வந்தன.

(ii) தமிழ்நாடு அவசரச்சட்டம் எண்.1, 2, 3 மற்றும் 4, நாள் 21.10.2021, தமிழ்நாடு அவசரச்சட்டம் எண்.5, நாள் 03.11.2021 மற்றும் தமிழ்நாடு அவசரச்சட்டம் எண்.7, நாள் 20.12.2021 ஆகியவற்றின்படி முறையே சிறப்பு நிலை நகராட்சிகளாக செயல்பட்டு வந்த தாம்பரம், பல்லவபுரம், காஞ்சிபுரம், கும்பகோணம், சிவகாசி, கரூர், கடலூர் ஆகிய நகராட்சிகள் ஆறு மாநகராட்சிகளாக தரம் உயர்த்தப்பட்டன.

(iii) மேற்குறிப்பிட்டுள்ள தரம் உயர்த்தப்பட்ட 6 மாநகராட்சிகளில், தாம்பரம் நகராட்சியுடன் பல்லவபுரம் சிறப்பு நிலை நகராட்சி, பம்மல் தேர்வு நிலை நகராட்சி, அனகாபுத்தூர் மற்றும் செம்பாக்கம் இரண்டாம் நிலை நகராட்சிகள் ஆகியவை சேர்க்கப்பட்டு தாம்பரம் மாநகராட்சியாக அமைத்துருவாக்கம் செய்யப்பட்டது.

(iv) சிவகாசி சிறப்பு நிலை நகராட்சி மற்றும் திருத்தங்கல் முதல் நிலை நகராட்சி ஆகிய 2 நகராட்சிகள் சேர்க்கப்பட்டு சிவகாசி மாநகராட்சியாக அமைத்துருவாக்கம் செய்யப்பட்டது.

(v) மேற்குறிப்பிட்டுள்ள 6 மாநகராட்சிகள் தோற்றுவிக்கப்பட்ட போது, தமிழ்நாட்டில் செயல்பட்டு வந்த 121 நகராட்சிகளில், 11 நகராட்சிகள் மாநகராட்சிகளுடன் இணைந்ததால், அதன் பின் 110 நகராட்சிகள் மட்டும் செயல்பட்டு வந்தன.

(vi) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி தேர்வு நிலை நகராட்சியாக செயல்பட்டு வந்த நாமக்கல் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

(vii) மேலே நான்காவதாக மற்றும் ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளின்படி கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள 28 பேரூராட்சிகள் இரண்டாம் நிலை நகராட்சிகளாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன :–

**அட்டவணை–I**

| வ. எண் | இரண்டாம் நிலை நகராட்சிகளாக தரம் உயர்த்தப்பட்ட பேரூராட்சிகள் | வ. எண் | இரண்டாம் நிலை நகராட்சிகளாக தரம் உயர்த்தப்பட்ட பேரூராட்சிகள் |
|---|---|---|---|
| 1. | மாங்காடு | 13. | வடலூர் |
| 2. | குன்றத்தூர் | 14. | அதிராம்பட்டினம் |
| 3. | நந்திவரம்–கூடுவாஞ்சேரி | 15. | திருச்செந்தூர் |
| 4. | சோளிங்கர் | 16. | கருமத்தம்பட்டி |
| 5. | கோட்டக்குப்பம் | 17. | காரமடை |
| 6. | உளுந்தூர்பேட்டை | 18. | கூடலூர் (கோயம்புத்தூர்) |
| 7. | திருக்கோவிலூர் | 19. | மதுக்கரை |
| 8. | சுரண்டை | 20. | பள்ளப்பட்டி |
| 9. | களக்காடு | 21. | திருமுருகன்பூண்டி |
| 10. | பொன்னேரி | 22. | மானாமதுரை |
| 11. | திருநின்றவூர் | 23. | முசிறி |
| 12. | திட்டக்குடி | 24. | லால்குடி |

| | | | |
|---|---|---|---|
| 25. | தாரமங்கலம் | 27. | கொல்லங்கோடு |
| 26. | இடங்கணசாலை | 28. | புகளூர் |

2. நகராட்சி நிர்வாக இயக்குநர் தமது கடிதத்தில், மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப்பட்ட நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுடன் சேர்க்கப்பட்ட நகராட்சிகளை விடுத்து 7 மண்டலங்களின் கீழ் செயல்பட்டு வரும் 138 நகராட்சிகளின் விவரங்களை கீழே அட்டவணைப்படுத்தியுள்ளார்:-

**அட்டவணை – II**

| வ. எண் | உத்தேசிக் கப்பட்டுள்ள மண்டலம் | மாவட்டத்தின் பெயர் | நகராட்சியின் பெயர் | நகராட்சியின் நிலை | மாவட்டவாரியாக நகராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு | திருவள்ளூர் | 1.திருவேற்காடு | தேர்வு நிலை | 6 |
| | | | 2.திருவள்ளூர் | முதல் நிலை | |
| | | | 3.பூவிருந்தவல்லி | முதல் நிலை | |
| | | | 4.திருத்தணி | இரண்டாம் நிலை | |
| | | | 5.பொன்னேரி | இரண்டாம் நிலை | |
| | | | 6.திருநின்றவூர் | இரண்டாம் நிலை | |
| | | காஞ்சிபுரம் | 1.மாங்காடு | இரண்டாம் நிலை | 2 |
| | | | 2.குன்றத்தூர் | இரண்டாம் நிலை | |
| | | செங்கல்பட்டு | 1.மறைமலைநகர் | சிறப்பு நிலை | 4 |
| | | | 2.செங்கல்பட்டு | முதல் நிலை | |
| | | | 3.மதுராந்தகம் | இரண்டாம் நிலை | |
| | | | 4.நந்திவரம்–கூடுவாஞ்சேரி | இரண்டாம் நிலை | |
| | | கடலூர் | 1.சிதம்பரம் | தேர்வு நிலை | 6 |
| | | | 2.பண்ருட்டி | முதல் நிலை | |
| | | | 3.விருதாச்சலம் | முதல் நிலை | |
| | | | 4.நெல்லிக்குப்பம் | இரண்டாம் நிலை | |
| | | | 5.திட்டக்குடி | இரண்டாம் நிலை | |
| | | | 6.வடலூர் | இரண்டாம் நிலை | |
| | | மொத்தம் | | | 18 |
| 2. | வேலூர் | வேலூர் | 1.குடியாத்தம் | முதல் நிலை | 2 |
| | | | 2.பேர்ணாம்பட்டு | இரண்டாம் நிலை | |
| | | திருவண்ணாமலை | 1.திருவண்ணாமலை | சிறப்பு நிலை | 4 |
| | | | 2.ஆரணி | முதல் நிலை | |
| | | | 3.திருவத்திபுரம் | இரண்டாம் நிலை | |
| | | | 4.வந்தவாசி | இரண்டாம் நிலை | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ராணிப்பேட்டை | 1. ராணிப்பேட்டை | தேர்வு நிலை | 6 |
| | | | 2. ஆற்காடு | முதல் நிலை | |
| | | | 3. அரக்கோணம் | முதல் நிலை | |
| | | | 4. மேல்விசாரம் | இரண்டாம் நிலை | |
| | | | 5. வாலாஜாப்பேட்டை | இரண்டாம் நிலை | |
| | | | 6. சோளிங்கர் | இரண்டாம் நிலை | |
| | | கள்ளக்குறிச்சி | 1, கள்ளக்குறிச்சி | முதல் நிலை | 3 |
| | | | 2 .உளுந்தூர்பேட்டை | இரண்டாம் நிலை | |
| | | | 3. திருக்கோவிலூர் | இரண்டாம் நிலை | |
| | | விழுப்புரம் | 1. விழுப்புரம் | தேர்வு நிலை | 3 |
| | | | 2. திண்டிவனம் | தேர்வு நிலை | |
| | | | 3. கோட்டக்குப்பம் | இரண்டாம் நிலை | |
| | | திருப்பத்தூர் | 1. திருப்பத்தூர் | தேர்வு நிலை | 4 |
| | | | 2. ஆம்பூர் | தேர்வு நிலை | |
| | | | 3. வாணியம்பாடி | தேர்வு நிலை | |
| | | | 4. ஜோலார்பேட்டை | இரண்டாம் நிலை | |
| | | மொத்தம் | | | 22 |
| 3 | சேலம் | சேலம் | 1. ஆத்தூர் | தேர்வு நிலை | 6 |
| | | | 2. மேட்டூர் | தேர்வு நிலை | |
| | | | 3. எடப்பாடி | முதல் நிலை | |
| | | | 4. நரசிங்கபுரம் | இரண்டாம் நிலை | |
| | | | 5. தாரமங்கலம் | இரண்டாம் நிலை | |
| | | | 6. இடங்கணசாலை | இரண்டாம் நிலை | |
| | | நாமக்கல் | 1. நாமக்கல் | சிறப்பு நிலை | 5 |
| | | | 2. திருச்செங்கோடு | தேர்வு நிலை | |
| | | | 3. கொமாரப்பாளையம் | முதல் நிலை | |
| | | | 4. ராசிபுரம் | முதல் நிலை | |
| | | | 5. பள்ளிப்பாளையம் | இரண்டாம் நிலை | |
| | | கரூர் | 1. குளித்தலை | இரண்டாம் நிலை | 3 |
| | | | 2. பள்ளப்பட்டி | இரண்டாம் நிலை | |
| | | | 3. புகளூர் | இரண்டாம் நிலை | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | தர்மபுரி | தர்மபுரி | சிறப்பு நிலை | 1 |
| | | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | சிறப்பு நிலை | 1 |
| | | மொத்தம் | | | 16 |
| 4. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 1. பட்டுக்கோட்டை | தேர்வு நிலை | 2 |
| | | | 2. அதிராம்பட்டினம் | இரண்டாம் நிலை | |
| | | நாகப்பட்டினம் | 1. நாகப்பட்டினம் | தேர்வு நிலை | 2 |
| | | | 2. வேதாரண்யம் | இரண்டாம் நிலை | |
| | | மயிலாடுதுறை | 1. மயிலாடுதுறை | தேர்வு நிலை | 2 |
| | | | 2. சீர்காழி | இரண்டாம் நிலை | |
| | | திருவாரூர் | 1. மன்னார்குடி | தேர்வு நிலை | 4 |
| | | | 2. திருவாரூர் | முதல் நிலை | |
| | | | 3.திருத்துறைப்பூண்டி | இரண்டாம் நிலை | |
| | | | 4. கூத்தாநல்லூர் | இரண்டாம் நிலை | |
| | | புதுக்கோட்டை | 1. புதுக்கோட்டை | தேர்வு நிலை | 2 |
| | | | 2. அறந்தாங்கி | முதல் நிலை | |
| | | திருச்சிராப்பள்ளி | 1. துறையூர் | தேர்வு நிலை | 5 |
| | | | 2. மணப்பாறை | முதல் நிலை | |
| | | | 3. துவாக்குடி | இரண்டாம் நிலை | |
| | | | 4. முசிறி | இரண்டாம் நிலை | |
| | | | 5. லால்குடி | இரண்டாம் நிலை | |
| | | அரியலூர் | 1. அரியலூர் | இரண்டாம் நிலை | 2 |
| | | | 2. ஜெயங்கொண்டம் | இரண்டாம் நிலை | |
| | | பெரம்பலூர் | பெரம்பலூர் | இரண்டாம் நிலை | 1 |
| | | மொத்தம் | | | 20 |
| 5. | திருப்பூர் | திருப்பூர் | 1.உடுமலைப்பேட்டை | தேர்வு நிலை | 6 |
| | | | 2. தாராபுரம் | முதல் நிலை | |
| | | | 3. பல்லடம் | முதல் நிலை | |
| | | | 4. காங்கேயம் | இரண்டாம் நிலை | |
| | | | 5. வெள்ளக்கோவில் | இரண்டாம் நிலை | |
| | | | 6.திருமுருகன்பூண்டி | இரண்டாம் நிலை | |
| | | ஈரோடு | 1. கோபிசெட்டிப் பாளையம் | தேர்வு நிலை | 4 |
| | | | 2. சத்தியமங்கலம் | முதல் நிலை | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 3.பவானி | இரண்டாம் நிலை | |
| | | | 4.புஞ்சைபுளியம்பட்டி | இரண்டாம் நிலை | |
| | | நீலகிரி | 1.உதகமண்டலம் | சிறப்பு நிலை | 4 |
| | | | 2.குன்னூர் | தேர்வு நிலை | |
| | | | 3.கூடலூர் (நீலகிரி) | இரண்டாம் நிலை | |
| | | | 4.நெல்லியாளம் | இரண்டாம் நிலை | |
| | | கோயம்புத்தூர் | 1.பொள்ளாச்சி | சிறப்பு நிலை | 7 |
| | | | 2.மேட்டுப்பாளையம் | தேர்வு நிலை | |
| | | | 3.வால்பாறை | தேர்வு நிலை | |
| | | | 4.கருமத்தம்பட்டி | இரண்டாம் நிலை | |
| | | | 5.கூடலூர் | இரண்டாம் நிலை | |
| | | | 6.காரமடை | இரண்டாம் நிலை | |
| | | | 7.மதுக்கரை | இரண்டாம் நிலை | |
| | | மொத்தம் | | | 21 |
| 6. | மதுரை | மதுரை | 1. திருமங்கலம் | முதல் நிலை | 3 |
| | | | 2. மேலூர் | இரண்டாம் நிலை | |
| | | | 3. உசிலம்பட்டி | இரண்டாம் நிலை | |
| | | தேனி | 1. தேனி அல்லிநகரம் | தேர்வு நிலை | 6 |
| | | | 2. கம்பம் | முதல் நிலை | |
| | | | 3. போடிநாயக்கனூர் | முதல் நிலை | |
| | | | 4. பெரியகுளம் | இரண்டாம் நிலை | |
| | | | 5. சின்னமனூர் | இரண்டாம் நிலை | |
| | | | 6. கூடலூர் (தேனி) | இரண்டாம் நிலை | |
| | | திண்டுக்கல் | 1 .கொடைக்கானல் | சிறப்பு நிலை | 3 |
| | | | 2. பழனி | தேர்வு நிலை | |
| | | | 3. ஒட்டன்சத்திரம் | இரண்டாம் நிலை | |
| | | சிவகங்கை | 1. காரைக்குடி | சிறப்பு நிலை | 4 |
| | | | 2. தேவக்கோட்டை | முதல் நிலை | |
| | | | 3. சிவகங்கை | முதல் நிலை | |
| | | | 4. மானாமதுரை | இரண்டாம் நிலை | |
| | | ராமநாதபுரம் | 1. ராமநாதபுரம் | சிறப்பு நிலை | 4 |
| | | | 2. பரமக்குடி | முதல் நிலை | |
| | | | 3. கீழக்கரை | இரண்டாம் நிலை | |
| | | | 4. ராமேஸ்வரம் | இரண்டாம் நிலை | |
| | | மொத்தம் | | | 20 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | திருநெல்வேலி | திருநெல்வேலி | 1.விக்ரமசிங்கபுரம் | இரண்டாம் நிலை | 3 |
| | | | 2.அம்பாசமுத்திரம் | இரண்டாம் நிலை | |
| | | | 3.களக்காடு | இரண்டாம் நிலை | |
| | | தென்காசி | 1.தென்காசி | முதல் நிலை | 6 |
| | | | 2.சங்கரன்கோவில் | முதல் நிலை | |
| | | | 3.கடையநல்லூர் | முதல் நிலை | |
| | | | 4.புளியங்குடி | இரண்டாம் நிலை | |
| | | | 5.செங்கோட்டை | இரண்டாம் நிலை | |
| | | | 6.சுரண்டை | இரண்டாம்நிலை | |
| | | தூத்துக்குடி | 1.கோவில்பட்டி | சிறப்பு நிலை | 3 |
| | | | 2.காயல்பட்டினம் | இரண்டாம் நிலை | |
| | | | 3.திருச்செந்தூர் | இரண்டாம்நிலை | |
| | | கன்னியாகுமரி | 1.குளச்சல் | முதல் நிலை | 4 |
| | | | 2.குழித்துறை | இரண்டாம் நிலை | |
| | | | 3.பத்மநாபபுரம் | இரண்டாம் நிலை | |
| | | | 4.கொல்லங்கோடு | இரண்டாம் நிலை | |
| | | விருதுநகர் | 1.ராஜபாளையம் | சிறப்பு நிலை | 5 |
| | | | 2.விருதுநகர் | தேர்வு நிலை | |
| | | | 3.ஸ்ரீவில்லிப்புத்தூர் | முதல் நிலை | |
| | | | 4.அருப்புக்கோட்டை | முதல் நிலை | |
| | | | 5.சாத்தூர் | இரண்டாம் நிலை | |
| | | **மொத்தம்** | | | **21** |
| | | **மொத்தம் (Grand Total)** | | | **138** |

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலும் தமது கடிதத்தில், புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள 28 இரண்டாம் நிலை நகராட்சிகள் உள்ளிட்ட மொத்தமுள்ள 138 நகராட்சிகளில், தற்போது பணிபுரிந்து வரும் பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் காலிப் பணியிடம் உள்ளிட்ட விவரங்களை கீழ்க்கண்டுள்ளவாறு அளித்துள்ளார்:–

**அட்டவணை–III**

| வ. எண் | பிரிவின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | | |
|---|---|---|---|---|
| | | தற்போது பணிபுரிந்து வரும் பணியாளர்கள் | காலிப் பணியிடங்கள் | மொத்தம் |
| 1. | பொதுப் பிரிவு | 2,938 | 468 | 3,406 |
| 2. | பொறியியல் பிரிவு | 1,524 | 1,058 | 2,582 |
| 3. | நகரமைப்புப் பிரிவு | 190 | 82 | 272 |
| 4. | பொது சுகாதாரப் பிரிவு | 1,235 | 389 | 1,624 |
| 5. | மருத்துவப் பிரிவு | 353 | 528 | 881 |
| 6. | தகவல் தொழில் நுட்பப் பிரிவு | 105 | 31 | 136 |
| 7. | மற்றவை | 32 | 9 | 41 |
| **மொத்தம்** | | **6,377** | **2,565** | **8,942** |

4. நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலும் தமது கடிதத்தில், ஏழு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகங்களின் கீழ் தற்போது செயல்பட்டு வரும் பல்வேறு நிலைகளில் உள்ள 138 நகராட்சிகளில் ஏற்கெனவே தோற்றுவிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் அவற்றின் நிலைகளுக்கேற்ப ஒரே சீராக இல்லை என்றும்

குறிப்பாக பேரூராட்சிகளிலிருந்து தரம் உயர்த்தப்பட்டு சிறப்பு நிலை நகராட்சிகளாக செயல்பட்டு வரும் மறைமலைநகர் மற்றும் கொடைக்கானல் போன்ற நகராட்சிகளில் மிகவும் குறைவான எண்ணிக்கையிலான பணியிடங்களே தோற்றுவிக்கப்பட்டுள்ளன என்றும், அதுபோல, பேரூராட்சிகளிலிருந்து நகராட்சிகளாக 2021–ஆம் ஆண்டுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்ட பல நகராட்சிகளில் புதிய பணியிடங்கள் போதுமான அளவிற்கு தோற்றுவிக்கப்படவில்லை என்றும் மேலும் சில சிறப்பு நிலை நகராட்சிகளில் இரண்டாம் நிலை நகராட்சிகளில் தோற்றுவிக்கப்பட்டுள்ள பணியிடங்களுக்கும் குறைவான பணியிடங்கள் மட்டுமே தோற்றுவிக்கப்பட்டுள்ளன என்றும் நகராட்சிகளின் நிலைகளுக்கு ஏற்ப பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாததால் பொதுமக்களுக்கு வழங்கும் சேவைகளில் காலதாமதம் ஏற்படுவதோடு, பல நிர்வாகச் சிரமங்களும் ஏற்படுகின்றன என்றும், நகராட்சிகளில் அதன் நிலைகளுக்கு ஏற்றவாறு போதுமான பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாததால் ஏற்படும் நிர்வாக சிரமங்களை கருத்தில் கொண்டு ஒவ்வொரு நிலையிலான நகராட்சிக்கும் ஒரே சீரான பணியிடங்களை தோற்றுவிப்பதற்கான வரையறைகளை (Norms) நிர்ணயம் செய்யவும் கீழ்க்காணுமாறு புதிய பணியிடங்களை தோற்றுவித்து தற்போது உள்ள பணியிடங்களை முறைப்படுத்தலாம் என்று தெரிவித்துள்ளார்:–

**அட்டவணை–IV**

**நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப கீழ்க்கண்டுள்ள பணியிடங்களை தோற்றுவிப்பதற்கான வரையறைகள் (Norms) நிர்ணயம் செய்தல்**

| வ. எண் | | பதவியின் பெயர் | நகராட்சியின் நிலைகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | நிலை II | நிலை I | தேர்வு நிலை | சிறப்பு நிலை |
| 1 | பொதுப்பிரிவு | மேலாளர் (Manager) | 1 (வகுப்பு–IV) | 1 (வகுப்பு II) | 1 (வகுப்பு IA) | 1 (வகுப்பு I) |
| 2 | | வருவாய் அலுவலர் (Revenue Officer) | 0 | 0 | 0 | 1 (வகுப்பு IA) |
| 3 | | உதவி வருவாய் அலுவலர் (Assistant Revenue Officer) | 0 | 0 | 1 (வகுப்பு II) | 0 |
| 4 | | கணக்கர் (Accountant) | 1 (வகுப்பு–V) | 1 (வகுப்பு–IV) | 1 (வகுப்பு II) | 1 (வகுப்பு–I A) |
| 5 | | வருவாய் ஆய்வாளர் (Revenue Inspector) | 1 | 1 | 2 | 2 |
| 6 | | உதவியாளர் (Assistant) | 1 | 2 | 3 | 5 |
| 7 | | இளநிலை உதவியாளர் (Junior Assistant) | 5 | 7 | 8 | 10 |
| 8 | | தட்டச்சர் (Typist) | 1 | 2 | 3 | 4 |
| 9 | | சுருக்கெழுத்து தட்டச்சர் (Steno Typist) | 0 | 0 | 0 | 1 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | | வருவாய் உதவியாளர் (Revenue Assistant) | 3 | 5 | 8 | 12 |
| 11 | | பதிவறை எழுத்தர் (Record Clerk) | 1 | 1 | 1 | 1 |
| 12 | | அலுவலக உதவியாளர் (Office Assistant) | 3 | 3 | 4 | 5 |
| 1 | பொறியியல் பிரிவு | நகராட்சி பொறியாளர் (Municipal Engineer) | 1 (நிலை III – உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர்) | 1 (நிலை II – உதவி செயற் பொறியாளர்) | 1 (நிலை II – உதவி செயற் பொறியாளர்) | 1 (நிலை I – செயற் பொறியாளர்) |
| 2 | | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் (Assistant Engineer / Junior Engineer) | 0 | 1 | 2 | 3 |
| 3 | | பணி மேற்பார்வையாளர் (Public Works Overseer) | 1 | 1 | 2 | 3 |
| 4 | | படவரைவாளர் நிலை–III (Draughtsman Grade–III) | 1 | 1 | 1 | 1 |
| 5 | | பணி ஆய்வாளர் (Work Inspector) | 2 | 3 | 4 | 5 |
| 6 | | மின் கண்காணிப்பாளர் நிலை–I (Electrical Superintendent Grade – I) | 0 | 0 | 0 | 1 |
| 7 | | மின் கண்காணிப்பாளர் நிலை–II (Electrical Superintendent Grade – II) | 0 | 0 | 1 | 0 |
| 8 | | மின்பணியாளர் நிலை I (Electrician Grade – I) | 0 | 1 | 0 | 1 |
| 9 | | மின்பணியாளர் நிலை II (Electrician Grade – II) | 1 | 0 | 0 | 0 |
| 10 | | குழாய் பொருத்துனர் நிலை – I (Fitter Grade – I) | 0 | 0 | 1 | 1 |
| 11 | | குழாய் பொருத்துனர் நிலை–II (Fitter Grade – II) | 1 | 1 | 0 | 0 |
| 1 | நகரமைப்புப் பிரிவு | முதுநிலை நகரமைப்பு அலுவலர் – (Senior Town Planning Officer) | 0 | 0 | 0 | 1 |
| 2 | | நகரமைப்பு அலுவலர் நிலை–I (Town Planning Officer Grade–I) | 0 | 0 | 1 | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | | நகரமைப்பு அலுவலர் நிலை–II (Town Planning Officer Grade – II) | 0 | 1 | 0 | 0 |
| 4 | | நகரமைப்பு ஆய்வாளர் (Town Planning Inspector) | 1 | 1 | 2 | 3 |
| 1 | பொது சுகாதாரப் பிரிவு | நகர் நல அலுவலர் (Municipal Health Officer) | 0 | 0 | 0 | 1 |
| 2 | | துப்புரவு அலுவலர் (Sanitary Officer) | 0 | 1 | 1 | 1 |
| 3 | | துப்புரவு ஆய்வாளர் (Sanitary Inspector) | 1 | 2 | 4 | 6 |
| 4 | | துப்புரவு பணி மேற்பார்வையாளர் (Sanitary Supervisor) | 4 | 5 | 7 | 10 |
| 5 | | களப்பணி உதவியாளர் (Field Assistant) | 1 | 1 | 1 | 1 |
| 1 | கணினிப் பிரிவு | கணினி உதவி திட்ட அமைப்பாளர் (Assistant Programmer) | 0 | 0 | 1 | 1 |
| **மொத்தம்** | | | **31** | **43** | **61** | **83** |

**5.** மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப பணியிடங்கள் தோற்றுவிப்பதற்கு வரையறை நிர்ணயம் செய்யக் கோரியுள்ளதன் அடிப்படையில் தற்போதுள்ள பணியிடங்கள், புதிய வரையறைபடி உள்ள பணியிடங்கள் மற்றும் ஊதிய விவரங்கள் ஆகியவற்றினை கீழ்க்கண்டுள்ளவாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்:–

**அட்டவணை – V**

**நகராட்சிகளில் தற்போதுள்ள பணியிடங்கள், புதிய வரையறைபடி உள்ள பணியிடங்கள் மற்றும் ஊதிய விவரங்கள்**

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | பணியிடங்களின் விவரங்கள் | பணியாளர் களின் எண்ணிக்கை | ஒரு மாதத்திற்கான ஊதியம் | ஒரு ஆண்டிற்கான ஊதியம் |
|---|---|---|---|---|
| 1. | அனுமதிக்கப்பட்ட மொத்த பணியிடங்கள் | 8,942 | 50.52 | 606.32 |
| 2. | அனுமதிக்கப்பட்ட 8,942 பணியிடங்களில் தற்போது பணிபுரிந்து வரும் பணியாளர்கள் | 6,377 | 36.55 | 438.65 |
| 3. | ஒப்புவிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் | 4,211 | 21.30 | 255.68 |
| 4. | புதிய வரையறைகள் நிர்ணயம் செய்து செயல்படுத்தும் போது அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் தக்க வைக்கப்படும் பணியிடங்கள் | 4,731 | 29.07 | 348.85 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | ஒப்புவிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள பணியிடங்களில் தற்போது பணிபுரிந்து வரும் பணியாளர்கள் | 2,258 | 11.34 | 136.09 |
| 6. | புதியதாக தோற்றுவிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் | 1,293 | 9.32 | 111.95 |
| 7. | புதிய வரையறைகள் நிர்ணயம் செய்து, தற்போதுள்ள பணியிடங்களை முறைப் படுத்தி புதிய பணியிடங்களை தோற்றுவிக்கும் போது அமையும் பணியிடங்கள் | 6,024 | 38.39 | 460.79 |

6. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தமது கடிதத்தில், 70 இரண்டாம் நிலை நகராட்சிகள், 31 முதல் நிலை நகராட்சிகள், 25 தேர்வு நிலை நகராட்சிகள் மற்றும் 12 சிறப்பு நிலை நகராட்சிகளில், புதிய வரையறைப்படி நிர்ணயம் செய்யப்படும் பணியிடங்கள், தற்போதுள்ள பணியிடங்களில் தக்க வைக்கப்படும் பணியிடங்கள், ஒப்புவிப்பு (Surrender) செய்யப்படும் பணியிடங்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் ஆகிய விவரங்களை கீழ்க்கண்டுள்ளவாறு தெரிவித்துள்ளார்:–

<u>அட்டவணை VI</u>

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | வரையறைகளின் படியான பணியிடங்கள் | அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் வரையறைகளின் படியான பணியிடங்களுக்காக தக்க வைக்கப்படும் பணியிடங்கள் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் வரையறைகளின் படியான பணியிடங்களுக்கு கூடுதலாக உள்ள பணியிடங்கள் | புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 (4–5) | 7 (3–4) |
| 1 | வகுப்பு I (Class I) | 12 | 3 | 3 | 0 | 9 |
| 2 | வகுப்பு IA (Class IA) | 49 | 5 | 5 | 0 | 44 |
| 3 | வகுப்பு II (Class II) | 81 | 37 | 37 | 0 | 44 |
| 4 | வகுப்பு IV (Class IV) | 101 | 107 | 101 | 6 | 0 |
| 5 | வகுப்பு V (Class V) | 512 | 379 | 379 | 0 | 133 |
| 6 | இளநிலை உதவியாளர் (Junior Assistant) | 887 | 970 | 887 | 83 | 0 |
| 7 | தட்டச்சர் (Typist) | 255 | 114 | 114 | 0 | 141 |
| 8 | சுருக்கெழுத்து தட்டச்சர் (Steno Typist) | 12 | 1 | 1 | 0 | 11 |
| 9 | வருவாய் உதவியாளர் (Revenue Assistant) | 709 | 815 | 709 | 106 | 0 |
| 10 | பதிவறை எழுத்தர் (Record clerk) | 138 | 175 | 138 | 37 | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 | அலுவலக உதவியாளர் (Office Assistant) | 463 | 452 | 452 | 0 | 11 |
| 12 | உதவி பொறியாளர் (Assistant Engineer) | 187 | 145 | 145 | 0 | 42 |
| 13 | உதவி செயற்பொறியாளர் (Assistant Executive Engineer) | 56 | 32 | 32 | 0 | 24 |
| 14 | செயற்பொறியாளர் (Executive Engineer) | 12 | 1 | 1 | 0 | 11 |
| 15 | பொதுப் பணி மேற்பார்வையாளர் (Public Works Overseer) | 187 | 72 | 72 | 0 | 115 |
| 16 | படவரைவாளர் நிலை– III (Draughtsman Grade – III) | 138 | 22 | 22 | 0 | 116 |
| 17 | பணி ஆய்வாளர் (Work Inspector) | 393 | 101 | 101 | 0 | 292 |
| 18 | மின் கண்காணிப்பாளர் நிலை–I (Electrical Superintendent Grade– I) | 12 | 11 | 11 | 0 | 1 |
| 19 | மின் கண்காணிப்பாளர் நிலை–II (Electrical Superintendent Grade – II) | 25 | 2 | 2 | 0 | 23 |
| 20 | மின்பணியாளர் நிலை I (Electrician Grade – I) | 43 | 109 | 43 | 66 | 0 |
| 21 | மின்பணியாளர் நிலை II (Electrician Grade–II) | 70 | 124 | 70 | 54 | 0 |
| 22 | குழாய் பொருத்துனர் நிலை – I (Fitter Grade – I) | 37 | 56 | 37 | 19 | 0 |
| 23 | குழாய் பொருத்துனர் நிலை–II (Fitter Grade – II) | 101 | 118 | 101 | 17 | 0 |
| 24 | முதுநிலை நகரமைப்பு அலுவலர் / செயற்பொறியாளர் (Senior Town Planning Officer / Executive Engineer) | 12 | 0 | 0 | 0 | 12 |
| 25 | நகரமைப்பு அலுவலர் நிலை–I / உதவிசெயற் பொறியாளர் (Town Planning Officer Grade–I / Assistant Executive Engineer) | 25 | 23 | 23 | 0 | 2 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 26 | நகரமைப்பு அலுவலர் நிலை–II / உதவி பொறியாளர் (Town Planning Officer Grade–II) / Assistant Engineer) | 31 | 8 | 8 | 0 | 23 |
| 27 | நகரமைப்பு ஆய்வாளர் (Town Planning Inspector) | 187 | 138 | 138 | 0 | 49 |
| 28 | நகர் நல அலுவலர் (Municipal Health Officer) | 12 | 17 | 12 | 5 | 0 |
| 29 | துப்புரவு அலுவலர் (Sanitary Officer) | 68 | 53 | 53 | 0 | 15 |
| 30 | துப்புரவு ஆய்வாளர் (Sanitary Inspector) | 304 | 340 | 304 | 36 | 0 |
| 31 | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் (Sanitary Supervisor) | 730 | 631 | 631 | 0 | 99 |
| 32 | களப்பணி உதவியாளர் (Field Assistant) | 138 | 62 | 62 | 0 | 76 |
| 33 | கணினி உதவி திட்ட அமைப்பாளர் (Assistant Programmer) | 37 | 80 | 37 | 43 | 0 |
| | **மொத்தம்** | **6,024** | **5,203** | **4,731** | **472** | **1,293** |

7. நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலும் தமது கடிதத்தில், தற்போது நிரந்தர பணியிலுள்ள பொதுப்பிரிவு, பொது சுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவின் கீழ் பணிபுரியும் ஓட்டுநர்கள், பொறியியல் பிரிவு, குடிநீர் பிரிவு மற்றும் தெருவிளக்குப் பிரிவுகளில் பணிபுரியும் பணியாளர்கள், இரவு காவலர்கள், சங்கிலியாளர்கள் முதலான 4,212 பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் பொது சுகாதாரப் பிரிவின் கீழ் பணிபுரியும் சுமார் 7,000 தூய்மை பணியாளர்கள் ஆகியோர் ஓய்வு பெற்ற பின்னர் அப்பணியிடங்கள் அனைத்தும் ஒப்புவிப்பு (Surrender) செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும், தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள 8,942 பணியிடங்களில், 4,212 பணியிடங்கள் மற்றும் சுமார் 7,000 தூய்மைப் பணியாளர் பணியிடங்கள் (தற்போது பணிபுரிந்து வரும் பணியாளர்கள்) ஒப்புவிப்பு செய்யும்போது, ஒரு ஆண்டிற்கான ஊதிய செலவினம் ரூ.606.32 கோடியிலிருந்து ரூ.460.79 கோடியாக குறையும் என்றும், இதன் காரணமாக ஓர் ஆண்டிற்கு ஊதிய செலவினம் சுமார் ரூ.145.00 கோடி குறைய வாய்ப்புள்ளது என்றும், புதிய வரையறைகளின்படி பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு தற்போதுள்ள பணியிடங்களை முறைப்படுத்தும்போது உள்ள பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஒப்புவிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள (Post proposed for Surrender) 4,212 பணியிடங்கள் மற்றும் சுமார் 7,000 தூய்மை

பணியாளர் பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்கள் ஆகியோர்களுக்கான ஊதியம், நகராட்சி நிதியிலிருந்து வழங்கப்படுவதால் நகராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கான ஊதிய செலவினத்திற்கு அரசின் நிதியுதவி தேவைப்படாது எனவும் தெரிவித்துள்ளார்.

8. மேற்கண்ட சூழ்நிலையில், நகராட்சிகளின் நிதி நிலையை கருத்தில் கொண்டும், நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாததால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்த்து அடிப்படை சேவைகளை உரிய காலக்கெடுவுக்குள் வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் கருத்துருவினை கவனமாக பரிசீலனை செய்த பின்னர், அனைத்து நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப ஒரே சீரான பணியிடங்கள் தோற்றுவித்து முறைப்படுத்துவதற்கான வரையறைகள் நிர்ணயம் செய்து கீழ்க்காணுமாறு அரசு ஆணையிடுகிறது:–

நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப ஒரே சீரான பணியிடங்கள் தோற்றுவித்து முறைப்படுத்துவதற்கான வரையறைகள் (Norms) நிர்ணயம் செய்தல்

| வ. எண் | | பதவியின் பெயர் | நகராட்சியின் நிலைகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | நிலை II | நிலை I | தேர்வு நிலை | சிறப்பு நிலை |
| 1 | பொதுப் பிரிவு | மேலாளர் (Manager) | 1 (வகுப்பு–IV) | 1 (வகுப்பு II) | 1 (வகுப்பு IA) | 1 (வகுப்பு I) |
| 2 | | வருவாய் அலுவலர் (Revenue Officer) | 0 | 0 | 0 | 1 (வகுப்பு IA) |
| 3 | | உதவி வருவாய் அலுவலர் (Assistant Revenue Officer) | 0 | 0 | 1 (வகுப்பு II) | 0 |
| 4 | | கணக்கர் (Accountant) | 1 (வகுப்பு–V) | 1 (வகுப்பு–IV) | 1 (வகுப்பு II) | 1 (வகுப்பு–I A) |
| 5 | | வருவாய் ஆய்வாளர் (Revenue Inspector) | 1 | 1 | 2 | 2 |
| 6 | | உதவியாளர் (Assistant) | 1 | 2 | 3 | 5 |
| 7 | | இளநிலை உதவியாளர் (Junior Assistant) | 5 | 7 | 8 | 10 |
| 8 | | தட்டச்சர் (Typist) | 1 | 2 | 3 | 4 |
| 9 | | சுருக்கெழுத்து தட்டச்சர் (Steno Typist) | 0 | 0 | 0 | 1 |
| 10 | | வருவாய் உதவியாளர் (Revenue Assistant) | 3 | 5 | 8 | 12 |
| 11 | | பதிவறை எழுத்தர் (Record Clerk) | 1 | 1 | 1 | 1 |
| 12 | | அலுவலக உதவியாளர் (Office Assistant) | 3 | 3 | 4 | 4 |
| 1 | பொறியியல் பிரிவு | நகராட்சி பொறியாளர் (Municipal Engineer) | 1 (நிலை III – உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர்) | 1 (நிலை II – உதவி செயற் பொறியாளர்) | 1 (நிலை II – உதவி செயற் பொறியாளர்) | 1 (நிலை I – செயற் பொறியாளர்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | பொறியியல் பிரிவு | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் (Assistant Engineer / Junior Engineer) | 0 | 1 | 2 | 3 |
| 3 | | பொதுப் பணி மேற்பார்வையாளர் (Public Works Overseer) | 1 | 1 | 2 | 3 |
| 4 | | படவரைவாளர் நிலை–III (Draughtsman Grade - III) | 1 | 1 | 1 | 1 |
| 5 | | பணி ஆய்வாளர் (Work Inspector) | 2 | 3 | 4 | 5 |
| 6 | | மின் கண்காணிப்பாளர் நிலை–I (Electrical Superintendent Grade – I) | 0 | 0 | 0 | 1 |
| 7 | | மின் கண்காணிப்பாளர் நிலை–II (Electrical Superintendent Grade – II) | 0 | 0 | 1 | 0 |
| 8 | | மின்பணியாளர் நிலை–I (Electrician Grade – I) | 0 | 1 | 0 | 1 |
| 9 | | மின்பணியாளர் நிலை–II (Electrician Grade – II) | 1 | 0 | 0 | 0 |
| 10 | | குழாய் பொருத்துனர் நிலை–I (Fitter Grade – I) | 0 | 0 | 1 | 1 |
| 11 | | குழாய் பொருத்துனர் நிலை–II (Fitter Grade – II) | 1 | 1 | 0 | 0 |
| 1 | நகரமைப்புப் பிரிவு | முதுநிலை நகரமைப்பு அலுவலர் / செயற்பொறியாளர் (திட்டம்) (Senior Town Planning Officer / Executive Engineer (Planning)) | 0 | 0 | 0 | 1 |
| 2 | | நகரமைப்பு அலுவலர் (நிலை–I) / உதவி செயற்பொறியாளர் (திட்டம்) (Town Planning Officer Grade – I / Assistant Executive Engineer (Planning)) | 0 | 0 | 1 | 0 |
| 3 | | நகரமைப்பு அலுவலர் (நிலை–II) / உதவி பொறியாளர் (திட்டம்) (Town Planning Officer Grade – II) / Assistant Engineer (Planning)) | 0 | 1 | 0 | 0 |
| 4 | | நகரமைப்பு ஆய்வாளர் (Town Planning Inspector) | 1 | 1 | 2 | 3 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | பொது சுகாதாரப் பிரிவு | நகர் நல அலுவலர் (Municipal Health Officer) | 0 | 0 | 0 | 1 |
| 2 | | துப்புரவு அலுவலர் (Sanitary Officer) | 0 | 1 | 1 | 1 |
| 3 | | துப்புரவு ஆய்வாளர் (Sanitary Inspector) | 1 | 2 | 4 | 6 |
| 4 | | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் (Sanitary Supervisor) | 4 | 5 | 7 | 10 |
| 5 | | களப்பணி உதவியாளர் (Field Assistant) | 1 | 1 | 1 | 1 |
| 1 | கணினிப் பிரிவு | கணினி உதவி திட்ட அமைப்பாளர் (Assistant Programmer) | 0 | 0 | 1 | 1 |
| **மொத்தம்** | | | **31** | **43** | **61** | **82** |

(i) மேலும், இரண்டாம் நிலை, முதல் நிலை, தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப பணியிடங்களின் வரையறை (Norms) மற்றும் ஊதிய விகிதங்களின் விவரங்கள் இவ்வாணையில் பிற்சேர்க்கை I, II, III மற்றும் IV–ல் முறையே தரப்பட்டுள்ளன.

9. நகராட்சிகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வரையறைகளின்படி புதிதாக 1,282 பணியிடங்கள் கீழ்க்காணுமாறு தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது:–

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | வரையறைகளின் படியான பணியிடங்கள் | அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் வரையறைகளின் படியான பணியிடங்களுக்காக தக்க வைக்கப்படும் பணியிடங்கள் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் வரையறைகளின் படியான பணியிடங்களுக்கு கூடுதலாக உள்ள பணியிடங்கள் | புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6(4-5)** | **7 (3-4)** |
| 1 | வகுப்பு I (Class I) | 12 | 3 | 3 | 0 | 9 |
| 2 | வகுப்பு IA (Class IA) | 49 | 5 | 5 | 0 | 44 |
| 3 | வகுப்பு II (Class II) | 81 | 37 | 37 | 0 | 44 |
| 4 | வகுப்பு IV (Class IV) | 101 | 107 | 101 | 6 | 0 |
| 5 | வகுப்பு V (Class V) | 512 | 379 | 379 | 0 | 133 |
| 6 | இளநிலை உதவியாளர் (Junior Assistant) | 887 | 970 | 887 | 83 | 0 |
| 7 | தட்டச்சர் (Typist) | 255 | 114 | 114 | 0 | 141 |
| 8 | சுருக்கெழுத்து தட்டச்சர் (Steno Typist) | 12 | 1 | 1 | 0 | 11 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | வருவாய் உதவியாளர் (Revenue Assistant) | 709 | 815 | 709 | 106 | 0 |
| 10 | பதிவறை எழுத்தர் (Record clerk) | 138 | 175 | 138 | 37 | 0 |
| 11 | அலுவலக உதவியாளர் (Office Assistant) | 451 | 452 | 451 | 1 | 0 |
| 12 | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் (Assistant Engineer/ Junior Engineer.) | 187 | 145 | 145 | 0 | 42 |
| 13 | உதவி செயற்பொறியாளர் (Assistant Executive Engineer) | 56 | 32 | 32 | 0 | 24 |
| 14 | செயற்பொறியாளர் (Executive Engineer) | 12 | 1 | 1 | 0 | 11 |
| 15 | பொதுப்பணி மேற்பார்வையாளர் (Public Works Overseer) | 187 | 72 | 72 | 0 | 115 |
| 16 | படவரைவாளர் நிலை – III (Draughtsman Grade - III) | 138 | 22 | 22 | 0 | 116 |
| 17 | பணி ஆய்வாளர் (Work Inspector) | 393 | 101 | 101 | 0 | 292 |
| 18 | மின் கண்காணிப்பாளர் நிலை–I (Electrical Superintendent Grade – I) | 12 | 11 | 11 | 0 | 1 |
| 19 | மின் கண்காணிப்பாளர் நிலை–II (Electrical Superintendent Grade – II) | 25 | 2 | 2 | 0 | 23 |
| 20 | மின்பணியாளர் நிலை I (Electrician Grade – I) | 43 | 109 | 43 | 66 | 0 |
| 21 | மின்பணியாளர் நிலை II (Electrician Grade – II) | 70 | 124 | 70 | 54 | 0 |
| 22 | குழாய் பொருத்துனர் நிலை – I (Fitter Grade – I) | 37 | 56 | 37 | 19 | 0 |
| 23 | குழாய் பொருத்துனர் நிலை – II (Fitter Grade – II) | 101 | 118 | 101 | 17 | 0 |
| 24 | முதுநிலை நகரமைப்பு அலுவலர் / செயற்பொறியாளர் (திட்டம்) (Senior Town Planning Officer / Executive Engineer (Planning)) | 12 | 0 | 0 | 0 | 12 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 25 | நகரமைப்பு அலுவலர் (நிலை–I) / உதவி செயற்பொறியாளர் (திட்டம்) (Town Planning Officer Grade – I / Assistant Executive Engineer (Planning)) | 25 | 23 | 23 | 0 | 2 |
| 26 | நகரமைப்பு அலுவலர் (நிலை–II) / உதவி பொறியாளர் (திட்டம்) (Town Planning Officer Grade – II) / Assistant Engineer (Planning)) | 31 | 8 | 8 | 0 | 23 |
| 27 | நகரமைப்பு ஆய்வாளர் (Town Planning Inspector) | 187 | 138 | 138 | 0 | 49 |
| 28 | நகர் நல அலுவலர் (Municipal Health Officer) | 12 | 17 | 12 | 5 | 0 |
| 29 | துப்புரவு அலுவலர் (Sanitary Officer) | 68 | 53 | 53 | 0 | 15 |
| 30 | துப்புரவு ஆய்வாளர் (Sanitary Inspector) | 304 | 340 | 304 | 36 | 0 |
| 31 | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் (Sanitary Supervisor) | 730 | 631 | 631 | 0 | 99 |
| 32 | களப்பணி உதவியாளர் (Field Assistant) | 138 | 62 | 62 | 0 | 76 |
| 33 | கணினி உதவி திட்ட அமைப்பாளர் (Assistant Programmer) | 37 | 80 | 37 | 43 | 0 |
| **மொத்தம்** | | **6,012** | **5,203** | **4,730** | **473** | **1,282** |

**10.** மேலும் நகராட்சிகளில் ஒரே சீரான பணியிடங்கள் தோற்றுவித்து வரையறைகள் நிர்ணயம் செய்தது தொடர்பாக கீழ்க்காணும் வழிகாட்டுதல்கள் / தெளிவுரைகள் வழங்கி அரசு ஆணையிடுகிறது:–

(i) மொத்தமுள்ள 138 நகராட்சிகளில் நிரந்தர பணியிலுள்ள பொதுப்பிரிவு, பொது சுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பணியின் கீழ் பணிபுரியும் ஓட்டுநர்கள்; பொறியியல் பணியின் கீழ், குடிநீர் பிரிவு மற்றும் தெருவிளக்குப் பிரிவுகளில் பணிபுரியும் பணியாளர்கள், இரவுக் காவலர்கள், சங்கிலியாளர்கள் முதலான பணியிடங்கள் மற்றும் பொது சுகாதாரப்பிரிவின் கீழ் பணிபுரியும் தூய்மைப் பணியாளர் பணியிடங்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் ஓய்வு பெற்ற பின்னர் அப்பணியிடங்கள் அரசுக்கு ஒப்புவிப்பு செய்யப்பட்டதாக கருதப்படும். இப்பணியிடங்களில் புதிதாக நியமனங்கள் செய்யக்கூடாது. அதன் பின்னர் அப்பணிகளை வெளிமுகமை (Services proposed for outsourcing) மூலம் மேற்கொள்ளலாம்.

(ii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களில், தற்போது பணிபுரியும் பணியாளர்களில், தேவைக்கு அதிகமாக இருக்கின்ற நகராட்சிகளிலிருந்து தேவைப்படும் நகராட்சிகளுக்கு பணியிட மாற்றம்

செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

(iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களைத் தவிர, வேறு பணியிடங்கள் ஏதேனும் இருப்பின், அப்பணியிடங்களில் முறையான ஊதிய விகிதங்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் அவர்கள் ஓய்வு பெறும் வரை பணிபுரிய அனுமதிக்கப்படுவார்கள். அதன் பின்னர் அப்பணியிடங்கள் காலாவதியாகிவிடும்.

(iv) நகராட்சி பணியிடங்கள் தொடர்பான வரையறைக்கு மேல் மிகையாக உள்ள பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்களை அதே பணியிடங்கள் காலியாக உள்ள இதர நகராட்சிகளில் பணி நிரவல் (redeployment) மூலம் நிரப்ப அனுமதிக்கப்படுகிறது.

(v) இரண்டாம் நிலை, முதல் நிலை, தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகளுக்கான பணியிடங்களுக்கு வரையறைகள் நிர்ணயம் செய்து, ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டு, தக்க வைக்கப்படும் பணியிடங்கள் தவிர, கூடுதலாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களும் சேர்த்து, ஒவ்வொரு இரண்டாம் நிலை நகராட்சியிலும் 31 பணியிடங்களும், முதல் நிலை நகராட்சியில் 43 பணியிடங்களும், தேர்வு நிலை நகராட்சியில் 61 பணியிடங்களும், சிறப்பு நிலை நகராட்சியில் 82 பணியிடங்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. மேற்கண்டவாறுள்ள பணியிடங்கள் தவிர அனைத்து பிற பணியிடங்களில் / பதவிகளில் பணிபுரியும் பணியாளர்களின் ஓய்விற்குப் பின்னர் அப்பணியிடங்கள் அனைத்தும் மறைந்து போகும் (vanishing posts) பணியிடங்களாகின்றன.

(vi) ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் காலியாக உள்ள பணியிடங்களையும், புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களையும் நிரப்புவதற்குரிய நடவடிக்கையினை நடைமுறையில் உள்ள விதிகள் / ஆணைகளின்படி மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

(vii) நகராட்சிகளில் ஆணையாளர் பணியிடம் காலியாக இருக்கும் நேர்வுகளில் அருகிலுள்ள நகராட்சியின் ஆணையாளருக்கு மட்டுமே ஆணையாளராக கூடுதல் பொறுப்பு வழங்கப்படவேண்டும்.

(viii) பணிமூப்பில் மூத்தவர்களாகவும், உதவி செயற்பொறியாளர் பதவி உயர்விற்கு தேவையான அனைத்து தகுதிகளையும் பெற்றிருக்கும் உதவி பொறியாளர்கள் மற்றும் இளநிலை பொறியாளர்கள் மட்டுமே இரண்டாம் நிலை நகராட்சிகளில் நகராட்சிப் பொறியாளர் நிலை–III பணியிடத்தில் நியமனம் செய்யப்படவேண்டும்.

(ix) மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பணியிடங்களிலும் தற்போது காலமுறை ஊதியத்தில் (Time scale) பணிபுரிந்து வரும் அனைத்து பணியாளர்களுக்கும் கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் உள்பட உரிய பணிப்பலன்கள் (Service benefits) நடைமுறையில் உள்ள விதிகள் / அரசாணைகளின்படி தொடரும்.

**11.** இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.3922/நிதி(நநிகுவ)/2023, நாள் 23.01.2023–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சிவ் தாஸ் மீனா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்**
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 600 028.
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்.
(நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – வழியாக).
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
(நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – வழியாக).

**நகல்:–**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
(கோ.எண்.13017/நப.1/2022).
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனித வள மேலாண்மை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 600 009.
நிதி (நநிகுவ/ ஊதிய குழு)த் துறை, சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3/அநமு.2) துறை, சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

23/01/2023

**பிரிவு அலுவலர்**

23/01/23

## பிற்சேர்க்கை – I

## அரசாணை (நிலை) எண்.10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை, நாள் 23.01.2023

| நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப ஒரே சீரான பணியிடங்கள் தோற்றுவித்து முறைப்படுத்துவதற்கான வரையறைகள் (Norms) நிர்ணயம் செய்தல் | | | | | |
|---|---|---|---|---|---|
| இரண்டாம் நிலை நகராட்சிகள் | | | | | |
| வ. எண் | | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய நிலை | ஊதிய விகிதம் |
| 1 | பொதுப் பிரிவு | மேலாளர் (வகுப்பு–IV) (Manager Class - IV) | 1 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 2 | | கணக்கர் (வகுப்பு-V) (Accountant Class - V) | 1 | நிலை – 10 | 20,600 – 75,900 |
| 3 | | வருவாய் ஆய்வாளர் (வகுப்பு-V) (Revenue Inspector Class - V) | 1 | நிலை – 10 | 20,600 – 75,900 |
| 4 | | உதவியாளர் (Assistant) | 1 | நிலை – 10 | 20,600 – 75,900 |
| 5 | | இளநிலை உதவியாளர் (Junior Assistant) | 5 | நிலை – 8 | 19,500 – 71,900 |
| 6 | | தட்டச்சர் (Typist) | 1 | நிலை – 8 | 19,500 – 71,900 |
| 7 | | வருவாய் உதவியாளர் (Revenue Assistant) | 3 | நிலை – 8 | 19,500 – 71,900 |
| 8 | | பதிவறை எழுத்தர் (Record Clerk) | 1 | நிலை – 2 | 15,900 – 58,500 |
| 9 | | அலுவலக உதவியாளர் (Office Assistant) | 3 | நிலை – 1 | 15,700 – 58,100 |
| 1 | பொறியியல் பிரிவு | நகராட்சி பொறியாளர் நிலை III – உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் (Municipal Engineer Grade-III – Assistant Engineer/ Junior Engineer) | 1 | நிலை – 20 | 37,700 – 1,38,500 |
| 2 | | பொதுப்பணி மேற்பார்வையாளர் (Public Works Overseer) | 1 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 3 | | படவரைவாளர் நிலை–III (Draughtsman Grade - III) | 1 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 4 | | பணி ஆய்வாளர் (Work Inspector) | 2 | நிலை – 5 | 18,200– 67,100 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | | மின்பணியாளர் நிலை – II (Electrician Grade – II) | 1 | நிலை – 8 | 19,500 – 71,900 |
| 6 | | குழாய் பொருத்துனர் நிலை – II (Fitter Grade – II) | 1 | நிலை – 8 | 19,500 – 71,900 |
| 1 | நகரமைப்புப் பிரிவு | நகரமைப்பு ஆய்வாளர் (Town Planning Inspector) | 1 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 1 | பொது சுகாதாரப் பிரிவு | துப்புரவு ஆய்வாளர் (Sanitary Inspector) | 1 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 2 | | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் (Sanitary Supervisor) | 4 | நிலை – 03 | 16,600 – 60,800 |
| 3 | | களப்பணி உதவியாளர் (Field Assistant) | 1 | நிலை – 06 | 18,500 – 68,000 |
| மொத்தம் | | | 31 | | |

**சிவ் தாஸ் மீனா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**// உண்மை நகல் //**

23/01/2023
**பிரிவு அலுவலர்**
23/01/23

## பிற்சேர்க்கை – II

## அரசாணை (நிலை) எண்.10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை, நாள் 23.01.2023

| நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப ஒரே சீரான பணியிடங்கள் தோற்றுவித்து முறைப்படுத்துவதற்கான வரையறைகள் (Norms) நிர்ணயம் செய்தல் | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் நிலை நகராட்சிகள் | | | | | |
| வ. எண் | | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய நிலை | ஊதிய விகிதம் |
| 1 | பொதுப் பிரிவு | மேலாளர் (வகுப்பு II) (Manager Class - II) | 1 | நிலை – 12 | 35,600 – 1,30,800 |
| 2 | | கணக்கர் (வகுப்பு-IV) (Accountant Class - IV) | 1 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 3 | | வருவாய் ஆய்வாளர்(வகுப்பு V) (Revenue Inspector Class - V) | 1 | நிலை – 10 | 20,600 – 75,900 |
| 4 | | உதவியாளர் (Assistant) | 2 | நிலை – 10 | 20,600 – 75,900 |
| 5 | | இளநிலை உதவியாளர் (Junior Assistant) | 7 | நிலை – 8 | 19,500 – 71,900 |
| 6 | | தட்டச்சர் (Typist) | 2 | நிலை – 8 | 19,500 – 71,900 |
| 7 | | வருவாய் உதவியாளர் (Revenue Assistant) | 5 | நிலை – 8 | 19,500 – 71,900 |
| 8 | | பதிவறை எழுத்தர் (Record Clerk) | 1 | நிலை – 2 | 15,900 – 58,500 |
| 9 | | அலுவலக உதவியாளர் (Office Assistant) | 3 | நிலை – 1 | 15,700 – 58,100 |
| 1 | பொறியியல் பிரிவு | நகராட்சி பொறியாளர் நிலை II / உதவி செயற்பொறியாளர் (Municipal Engineer Grade-II /Assistant Executive Engineer) | 1 | நிலை – 22 | 56,100 – 2,05,700 |
| 2 | | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் (Assistant Engineer / Junior Engineer) | 1 | நிலை – 20 | 37,700 – 1,38,500 |
| 3 | | பொதுப்பணி மேற்பார்வையாளர் (Public Works Overseer) | 1 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 4 | | படவரைவாளர் நிலை–III (Draughtsman Grade - III) | 1 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | | பணி ஆய்வாளர் (Work Inspector) | 3 | நிலை – 5 | 18,200– 67,100 |
| 6 | | மின்பணியாளர் நிலை I (Electrician Grade – I) | 1 | நிலை – 09 | 20,000 – 73,700 |
| 7 | | குழாய் பொருத்துனர் நிலை – II (Fitter Grade – II) | 1 | நிலை – 8 | 19,500 – 71,900 |
| 1 | நகரமைப்பு பிரிவு | நகரமைப்பு அலுவலர் நிலை II / உதவி பொறியாளர் (திட்டம்) (Town Planning Officer Grade – II / Assistant Engineer (Planning)) | 1 | நிலை – 13 | 35,900– 1,31,500 |
| 2 | | நகரமைப்பு ஆய்வாளர் (Town Planning Inspector) | 1 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 1 | பொது சுகாதாரப் பிரிவு | துப்புரவு அலுவலர் (Sanitary Officer) | 1 | நிலை – 12 | 35,600 – 1,30,800 |
| 2 | | துப்புரவு ஆய்வாளர் (Sanitary Inspector) | 2 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 3 | | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் (Sanitary Supervisor) | 5 | நிலை – 03 | 16,600 – 60,800 |
| 4 | | களப்பணி உதவியாளர் (Field Assistant) | 1 | நிலை – 06 | 18,500 – 68,000 |
| | | **மொத்தம்** | **43** | | |

**சிவ் தாஸ் மீனா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**// உண்மை நகல் //**

23/01/2023
**பிரிவு அலுவலர்**

23/01/23

## பிற்சேர்க்கை – III

## அரசாணை (நிலை) எண்.10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை, நாள் 23.01.2023

| நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப ஒரே சீரான பணியிடங்கள் தோற்றுவித்து முறைப்படுத்துவதற்கான வரையறைகள் (Norms) நிர்ணயம் செய்தல் | | | | | |
|---|---|---|---|---|---|
| தேர்வு நிலை நகராட்சிகள் | | | | | |
| வ. எண் | | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய நிலை | ஊதிய விகிதம் |
| 1 | பொதுப் பிரிவு | மேலாளர் (வகுப்பு IA) (Manager Class – IA) | 1 | நிலை – 18 | 36,900 – 1,35,100 |
| 2 | | உதவி வருவாய் அலுவலர் (வகுப்பு II) (Assistant Revenue Officer Class II) | 1 | நிலை – 12 | 35,600 – 1,30,800 |
| 3 | | கணக்கர் (வகுப்பு II) (Accountant Class II) | 1 | நிலை – 12 | 35,600 – 1,30,800 |
| 4 | | வருவாய் ஆய்வாளர் (வகுப்பு V) (Revenue Inspector Class - V) | 2 | நிலை – 10 | 20,600 – 75,900 |
| 5 | | உதவியாளர் (Assistant) | 3 | நிலை – 10 | 20,600 – 75,900 |
| 6 | | இளநிலை உதவியாளர் (Junior Assistant) | 8 | நிலை – 8 | 19500 – 71900 |
| 7 | | தட்டச்சர் (Typist) | 3 | நிலை – 8 | 19,500 – 71,900 |
| 8 | | வருவாய் உதவியாளர் (Revenue Assistant) | 8 | நிலை – 8 | 19,500 – 71,900 |
| 9 | | பதிவறை எழுத்தர் (Record Clerk) | 1 | நிலை – 2 | 15,900 – 58,500 |
| 10 | | அலுவலக உதவியாளர் (Office Assistant) | 4 | நிலை – 1 | 15,700 – 58,100 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | பொறியியல் பிரிவு | நகராட்சி பொறியாளர் நிலை II / உதவி செயற்பொறியாளர் (Municipal Engineer Grade-II Assistant Executive Engineer) | 1 | நிலை – 22 | 56,100 – 2,05,700 |
| 2 | | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் (Assistant Engineer / Junior Engineer) | 2 | நிலை – 20 | 37,700 – 1,38,500 |
| 3 | | பொதுப் பணி மேற்பார்வையாளர் (Public Works Overseer) | 2 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 4 | | படவரைவாளர் நிலை–III (Draughtsman Grade - III) | 1 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 5 | | பணி ஆய்வாளர் (Work Inspector) | 4 | நிலை – 5 | 18,200– 67,100 |
| 6 | | மின் கண்காணிப்பாளர் நிலை–II (Electrical Superintendent Grade – II) | 1 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 7 | | குழாய் பொருத்துனர் நிலை – I (Fitter Grade – I) | 1 | நிலை – 09 | 20,000 – 73,700 |
| 1 | நகரமைப்புப் பிரிவு | நகரமைப்பு அலுவலர் நிலை–I / உதவி செயற்பொறியாளர் (திட்டம்) Town Planning Officer Grade – I / Assistant Executive Engineer (Planning)) | 1 | நிலை – 22 | 56,100 – 2,05,700 |
| 2 | | நகரமைப்பு ஆய்வாளர் (Town Planning Inspector) | 2 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | பொது சுகாதாரப் பிரிவு | துப்புரவு அலுவலர் (Sanitary Officer) | 1 | நிலை – 12 | 35,600 – 1,30,800 |
| 2 | | துப்புரவு ஆய்வாளர் (Sanitary Inspector) | 4 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 3 | | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் (Sanitary Supervisor) | 7 | நிலை – 03 | 16,600 – 60,800 |
| 4 | | களப்பணி உதவியாளர் (Field Assistant) | 1 | நிலை – 06 | 18,500 – 68,000 |
| 1 | கணினிப் பிரிவு | கணினி உதவி திட்ட அமைப்பாளர் (Assistant Programmer) | 1 | நிலை – 13 | 35,900– 1,31,500 |
| மொத்தம் | | | 61 | | |

**சிவ் தாஸ் மீனா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**// உண்மை நகல் //**

23/01/2023.
**பிரிவு அலுவலர்**
23/01/23

## பிற்சேர்க்கை – IV

## அரசாணை (நிலை) எண்.10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை, நாள் 23.01.2023

| நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப ஒரே சீரான பணியிடங்கள் தோற்றுவித்து முறைப்படுத்துவதற்கான வரையறைகள் (Norms) நிர்ணயம் செய்தல் | | | | | |
|---|---|---|---|---|---|
| **சிறப்பு நிலை நகராட்சிகள்** | | | | | |
| வ. எண் | | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய நிலை | ஊதிய விகிதம் |
| 1 | பொதுப் பிரிவு | மேலாளர் (வகுப்பு I) (Manager Class I) | 1 | நிலை – 20 | 37,700 – 1,38,500 |
| 2 | | வருவாய் அலுவலர்(வகுப்பு IA) (Revenue Officer Class IA) | 1 | நிலை – 18 | 36,900 – 1,35,100 |
| 3 | | கணக்கர் (வகுப்பு–I A) (Accountant Class IA) | 1 | நிலை – 18 | 36,900 – 1,35,100 |
| 4 | | வருவாய் ஆய்வாளர் (வகுப்பு-V) (Revenue Inspector Class V) | 2 | நிலை – 10 | 20,600 – 75,900 |
| 5 | | உதவியாளர் (Assistant) | 5 | நிலை – 10 | 20,600 – 75,900 |
| 6 | | இளநிலை உதவியாளர் (Junior Assistant) | 10 | நிலை – 8 | 19,500 – 71,900 |
| 7 | | தட்டச்சர் (Typist) | 4 | நிலை – 8 | 19,500 – 71,900 |
| 8 | | சுருக்கெழுத்து தட்டச்சர் (Steno Typist) | 1 | நிலை – 10 | 20,600 – 75,900 |
| 9 | | வருவாய் உதவியாளர் (Revenue Assistant) | 12 | நிலை – 8 | 19,500 – 71,900 |
| 10 | | பதிவறை எழுத்தர் (Record Clerk) | 1 | நிலை – 2 | 15,900 – 58,500 |
| 11 | | அலுவலக உதவியாளர் (Office Assistant) | 4 | நிலை – 1 | 15,700 – 58,100 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | பொறியியல் பிரிவு | நகராட்சி பொறியாளர் (நிலை I– செயற்பொறியாளர்) (Municipal Engineer Grade-I Executive Engineer) | 1 | நிலை – 25 | 59,300 – 2,17,600 |
| 2 | | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் (Assistant Engineer / Junior Engineer) | 3 | நிலை – 20 | 37,700 – 1,38,500 |
| 3 | | பொதுப்பணி மேற்பார்வையாளர் (Public Works Overseer) | 3 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 4 | | படவரைவாளர் நிலை–III (Draughtsman Grade - III) | 1 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 5 | | பணி ஆய்வாளர் (Work Inspector) | 5 | நிலை – 5 | 18,200– 67,100 |
| 6 | | மின் கண்காணிப்பாளர் நிலை–I (Electrical Superintendent Grade – I) | 1 | நிலை – 13 | 35,900– 1,31,500 |
| 7 | | மின்பணியாளர் நிலை I (Electrician Grade – I) | 1 | நிலை – 09 | 20,000 – 73,700 |
| 8 | | குழாய் பொருத்துனர் நிலை – I (Fitter Grade – I) | 1 | நிலை – 09 | 20,000 – 73,700 |
| 1 | நகரமைப்புப் பிரிவு | முதுநிலை நகரமைப்பு அலுவலர் / செயற்பொறியாளர் (திட்டம்) (Senior Town Planning Officer / Executive Engineer (Planning)) | 1 | நிலை – 25 | 59,300 – 2,17,600 |
| 2 | | நகரமைப்பு ஆய்வாளர் (Town Planning Inspector) | 3 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | பொது சுகாதாரப் பிரிவு | நகர் நல அலுவலர் (Municipal Health Officer) | 1 | நிலை – 23 | 56,900 – 2,09,200 |
| 2 | | துப்புரவு அலுவலர் (Sanitary Officer) | 1 | நிலை – 12 | 35,600 – 1,30,800 |
| 3 | | துப்புரவு ஆய்வாளர் (Sanitary Inspector) | 6 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 4 | | துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் (Sanitary Supervisor) | 10 | நிலை – 03 | 16,600 – 60,800 |
| 5 | | களப்பணி உதவியாளர் (Field Assistant) | 1 | நிலை – 06 | 18,500 – 68,000 |
| 1 | கணினிப் பிரிவு | கணினி உதவி திட்ட அமைப்பாளர் (Assistant Programmer) | 1 | நிலை – 13 | 35,900– 131500 |
| மொத்தம் | | | 82 | | |

**சிவ் தாஸ் மீனா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**// உண்மை நகல் //**

23/01/2023

பிரிவு அலுவலர்

23/01/23